# சிலம்பில் சைவச் சிந்தனைகள்

**முனைவர் ஆ. ரந்திர்குமார்**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ம.தி.தா.இந்துக்கல்லூரி, திருநெல்வேலி
https://doi.org/10.5281/zenodo.15526584

**முன்னுரை**

இலக்கியங்கள் காலந்தோறும் பண்பாட்டு மரபினை வெளிப்படுத்தும் களங்களாக அமைந்துள்ளன. இப்பண்பாட்டின் ஒரு கூறு சமயம் ஆகும். மனித வரலாற்றில் பல சமயங்கள் நம்மைக் கடந்து போயின. ஒவ்வொரு சமயமும் அன்பை, அறத்தைப் போதிப்பதற்காக உருவாக்கப்பட்டவை. காலவரிசை அடிப்படையில் சமயங்களில் சமணம், பௌத்தம் ஆகியவற்றை பழமை வாய்ந்த சமயமாகக் குறிப்பிடுவர். முதற்காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்று பல சிறப்புப் பெயர்களில் அழைக்கப்பெறும் சிலப்பதிகாரம் ஒரு சமயக் காப்பியம் என்பது அனைவரும் அறிந்ததே. சமணக் கருத்துரைகளை வெளிப்படுத்த எழுதப்பட்ட சிலப்பதிகாரத்தில் அச்சமயம் மட்டுமன்றி சைவம் தொடர்பான சிந்தனைகள் வெளிப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றை வெளிக்காட்டும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

**சிலப்பதிகாரம் உருவாகக் காரணம்**

ஒவ்வொரு நூல் எழுதுவதற்கும் அடிப்படையான காரணங்கள் சில உண்டு. அத்தகைய நிலையில் சிலப்பதிகாரம் எழுதப்படுவதற்கு குன்றக்குரவர்கள் கண்ட காட்சியும் அதனை மன்னனிடம் எடுத்துக் கூறியதும், சீத்தலைச்சாத்தனார் கூறிய அக்கதையும், ஊக்கமுமே இளங்கோவடிகளை இக்காப்பியம் படைக்கச் செய்தது என்று ந.செயப்பிரகாசு சிலப்பதிகாரம் காட்டும் தமிழக சமுதாயநிலை என்ற நூலில் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கண்ணகிக்கு சிலை அமைக்க வேண்டுமெனவும் பத்தினித் தெய்வமாக வழிபடவேண்டும் என விழைவதும் சமய நோக்கத்தையேக் காட்டுகின்றது. ஆகையினால் சிலப்பதிகாரம் கோவலன் கண்ணகி மாதவி ஆகியோரின் கதையை இயம்புவதாயினும் உரைசால்பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது எனலாம். இளங்கோவடிகள் சமணத்துறவி என்பதால் சமணக் கொள்கைகள் இக்காப்பியத்தில் மிகுதியாக வலியுறுத்தப்படுகின்றன.

**சிவன் பற்றியச் சிந்தனைகள்**

சிவன் எல்லாக் கடவுள்களுக்கும் முதன்மையானவன். சிவவழிபாடு பழமையானது. பலபுராணங்கள் சிவனைப் பற்றியக் கதைகளையும் பெருமைகளையும் சிறப்புகளையும் எடுத்தியம்புகின்றன. சிலப்பதிகாரத்தில் சிவனைப் பற்றி,

**“பிறைமுடிக் கண்ணிய பெரியோன்”**

**(வேட்டுவரி .23:1)**

**“மறைமுது முதல்வன்”**

**(இந்திரவிழா ஊர் எடுத்த காதை, அடி : 169)**

என குறிப்பிடுவதிலிருந்து சிவனின் தொன்மை, பெருமைகளை அறியமுடிகின்றது.

### சிவன் ஆலயங்கள்

*இன்று தமிழகத்து தலைநகரங்கள் அனைத்திலும் சிவன் கோயில்கள் இல்லாத இடம் இல்லை எனலாம். சிலப்பதிகார காலத்திலேயே சிவன் கோயில்கள் அமைந்திருந்ததை இக்காப்பியம் குறிப்பிடுகிறது.*

*பூம்புகார் நகரத்தில் சிவன்கோயில் அமைந்திருந்தது என்பதை 'பிறவா யாக்கை பெரியோன் கோயில்சு என்று இந்திரவிழா ஊர் எடுத்த காதை 169 என்ற பாடல் அடி காட்டுகிறது. கயிலைநன்மலையிறை (குன்றக்குறவை : 16:1) ஆலமர் செல்வன் (கட்டுரைக்காதை :91) அருந்திறல் கடவுள் அகன் பெருங்கோயில் (புறஞ்சேரி இறுத்த காதை : 13:7) என்ற பாடல் அடிகள் சிவன் ஆலயங்கள் பற்றி பெருமை சாற்றுகின்றன. சிவபெருமானுக்கு நெற்றிக்கண் உண்டு என்பதை "நுதல்விழி நாட்டத்து இளையோன் கோயிலும்" (ஊர்காண் காதை : 7) பாடலடி வெளிக்காட்டுகிறது.*

*சிவபெருமான் கைலாயம், இமயமலையில் குடிகொண்டிருப்பவன் என்பது நமது மரபுச் சிந்தனை. அதை "கயிலைநன்மலையிறை" என்ற பாடல் அடியும் "இமையச்சிமயத்து இருங்குயிலாலுவத்துந் உமையொடு பாகத்து ஒருவனை வணங்கி" (நடுகற்காதை 102.103) குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.*

### சிவனின் தோற்றம்

*சிவபெருமானின் தோற்றப் பொலிவு பற்றி சில பாடல்கள் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன. நுதல்விழி நாட்டத்து இளையோன்" என்ற அடி நெற்றிக்கண்ணைக் குறிப்பிடுகிறது. தெண்ணீர் கரந்த செஞ்ச டைக் கடவுள் (கால்கோட்காதை .614) சிவன் சடையை உடையவர் என்பதையும், சேரன் செங்குட்டுவன் தனது ஆட்சிக்கு முன்பாக சிவனை ஆடக மாடத்திலமர்ந்து வணங்கினான் என்று குறிப்பிடப்படுகிறது. பிறைமுடிக் கண்ணிய பெரியோன் (காடுகாண்காதை - 72) என்ற பாடல் அடி சிவன் பிறைத் திங்களைச் சூடியவர் என்பதையும், மேலும் இளம்பிறை சூடிய இளையவன் என்ற பாடல் அடியும் இதையே உணர்த்துகிறது. "நிலவுக் கதிர் முடித்த நீறுருஞ் சென்னி" என்ற பாடலடி தோற்றப் பொலிவைக் குறிப்பிடுகிறது. பிறைமுடிக் கண்ணி பெரியோன் ஏந்திய அறவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும் (ஊர்காண் காதை - 7) சிவன் கையில் சூலம் என்ற ஆயுதத்தை ஏந்தியவன் என்பதைக் காட்டுகிறது. உமையை ஒரு பாகத்தில் கொண்டவன் என்பதை "உமையவள் ஒரு திறனாக ஓங்கில்", "உமையொரு பாகத்து ஒருவன்" போன்ற பாடல் அடிகள் வெளிக்காட்டுகின்றன.*

*காளையை வாகனமாகக் கொண்டவன் என்பதை "ஆன ஏறு ஊர்ந்தோன்" (காடுகாண் காதை - 72) என்ற பாடல் அடி மூலம் காண முடிகின்றது. இவ்வாறாக சிவனின் பல்வேறு விதமான சிந்தனைகளை சிலப்பதிகாரத்தில் காண முடிகிறது.*

### முப்புரம் எரித்தவன்

*சிவனை முப்புரம் எரித்தவன் என்று புராணங்கள் குறிப்பிடுகின்றன. பரிபாடலில் சிவன் முப்புரம் எரித்த செய்தி இடம்பெறுகிறது. புறநானூற்றில் திரிபுரம் எரித்தவரும் நஞ்சு ண்டவரும் சந்திரனைச் சூடிய வருமானவர் சிவன் தவிர கலித்தொகையிலும் முப்புரம் எரித்தகடவுள்என்றுசிவனைகுறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது. சிலப்பதிகாரத்திலும் திரிபுரம் எரித்த வரலாறு உள்ளது.*

> ***"சீர் இயல் பொலிய நீர் அல நீங்கப்***
> ***பாரதி ஆடிய பாரதி அரங்கத்துத்***
> ***திரிபுரம் எரியத் தேவர் வேண்ட***
> ***எரிமுகப்பேர் அன்பு ஏவல் கேட்ப***
> ***உமையவள் ஒருதிறன் ஆக ஓங்கிய***
> ***இமையவன் ஆடிய கொடு கொட்டி ஆடலும்"***
>
> ***(கடலாடுகாதை 38-43)***

*என்ற பாடல் அடி முப்புரம் எரித்த செய்தியை வெளிப்படுத்துகின்றது. மற்றொருப்பாடல்,*

> ***"எயில் மூன்று எறிந்த இதழ் வேற்கொற்றமும்"***
>
> ***(கடலாடுகாதை)***

*பாடல்அடி உணர்த்துகிறது.*

இவ்வாறாக சிவனின் உருவமும், பெருமையும், சிறப்புகளும் பரவிக்கிடக்கின்றன எனலாம். அத்தோடு மட்டுமல்லாமல் மேற்கண்ட பாடலடிகளில் சிவனது அடைமொழிப் பெயர்களும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது எனலாம்.

**சிவனின் ஆடல்**

மாதவி ஆடற்கலையில் தேர்ச்சி பெற்றவள் தலைக்கோல் பட்டம் பெற்றவள். அகக்கூத்து, புறக்கூத்து என்று இருவகைக்கூத்தின் இலக்கணங்களையும் நுணுக்கமாக உணர்ந்தவள். ஆடல், பாடல், தாளம், ஒத்து இயங்குமாறு செயல்படுபவள். மாதவியின் ஆடல் திறத்தை,

> "பலவகைக்கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
> பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும்"

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. மாதவி ஆடிய 11 வகையான ஆடல்கள் இருவகைகளாகப் பாகுபாடு செய்யப்படுகின்றன. 1. நின்றுகொண்டு ஆடக்கூடியவை 2. வீழ்ந்து ஆடும் ஆடல்கள்

**நின்றுகொண்டு ஆடும் ஆடல்கள்**

1. அல்லியம்
2. கொடுகொட்டி
3. குடைக்கூத்து
4. குடக்கூத்து
5. பாண்டரங்கம்
6. மல்லாடம்

**வீழ்ந்து ஆடும் ஆடல்கள்**

1. துடிக்கூத்து
2. கடையக்கூத்து
3. பேடிக்கூத்து
4. மரக்கால் கூத்து
5. பாவைக்கூத்து

இவ்வாறான பதினொரு வகையான ஆடல்களில் கொடுகொட்டி மற்றும் பாண்டரங்கம் ஆகிய இரண்டு ஆடல்களும் சிவனுக்குரிய ஆடல்களாகும். கலித்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவன் கொடுகொட்டி ஆகிய குறிப்பு இடம்பெறுகிறது.

**முடிவுரை**

காப்பியங்களை பெருங்காப்பியங்கள் என்றும் சிறுகாப்பியங்கள் என்றும் பிரிப்பர். பெருங்காப்பியங்களுள் முதன்மையாகத் திகழ்வது சிலப்பதிகாரம். இது காப்பியத்திற்கான முழுமையான இலக்கணத்தை ஏற்று விளங்குகிறது. காப்பியங்கள் பொதுவாகவே சமயநெறிகளைப் பரப்புவதற்காக எழுதப்பட்டவையாகும். சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் சமண சமயத்தின் பரப்புரையை மேற்கொள்ள இக்காப்பியம் புனைந்தார். எனினும் அவர் அனைத்து சமயத்தின் மீதான சிந்தனையையும் மதிப்பையும் கொண்டவராக இருந்துள்ளமையால் சைவக் கடவுள் சிவன் மீதான கருத்துக்களை பல இடங்களில் பதிவு செய்துள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது எனலாம்.